# March 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,077 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய அனல் மின் நிலையத்தின் உற்பத்தியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

(i) சென்னை தலைமைச் செயலகத்தில் காணொலி முறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இரு 660 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின்நிலையத்தை அவர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

(ii) தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தொடர் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, உடன்குடியில் ரூ.13,077 கோடியில் பாரத மிகுமின் நிறுவனம் (பெல்) வாயிலாக இரு 660 மெகாவாட் அனல் மின் நிலையம் (அலகு 1) அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கான பணிகள் முடிக்கப்பட்டு, பல்வேறு கட்ட சோதனை ஓட்டங்கள் நடைபெற்றன.

(iii) பொதுவாகவே அதிக வெப்ப நிலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவப்படும் அனல் மின் நிலையத் திட்டங்கள் 5 முதல் 6 சதவீதம் வரை திறன்மிக்கவை. அத்தகைய கட்டமைப்பில் உடன்குடி மின் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

(iv) இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்துக்கு எரிபொருள் செலவு குறைவதுடன் மின் உற்பத் தியைத் தொடங்குவதற்கு குறைந்த நேரமே தேவைப்படும். கூடுதல் சிறப்பம்சமாக இந்த அனல் மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரி மிக நுட்பமாக தருவிக்கப்படுகிறது. அதாவது, கடலோரத்தில் பிரத்யேகமாக 9 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்ட துறைமுக இறங்குதளங்கள் மூலம் மணிக்கு தலா 2,000 டன் நிலக்கரி நேரடியாக மின் நிலையத்துக்கு கொண்டு செல்லப்படும்.

(v) இதனால், போக்குவரத்து செலவு குறைகிறது. அதுமட்டுமல்லாது ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நிலக்கரி நுகர்வு 0.50 முதல் 0.55 கிலோ கிராம் அளவு மட்டுமே தேவைப்படுவதால், கார்பன்-டை- ஆக்சைட் உமிழ்வு 25 முதல் 30 சதவீதம் வரை குறைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டமாக உள்ளது.

(vi) இந்த மின் நிலையத்துக்கான அனைத்து தண்ணீர் தேவைகளும் அனல் மின் நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள கடல்நீரைக் குடி நீராக்கும் நிலையம் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மற்றும் தாமிரவருணி நீரைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

(vii) இந்தத் திட்டத்தின் மூலம், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்து, வெளிச்சந்தையில் மின் கொள்முதல் செய்வது குறைக்கப்படும். இதனால் மின்சார வாரியத்தின் நிதிநிலை மேம்படும். மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களிக்கும்.

(viii) உடன்குடி மின் திட்ட வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக ஒன்றரை லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடங்கப்பட்டு இதுவரை 52,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

2. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய தீர்மானம் கொண்டு வருவது தொடர்பான நோட்டீஸ்களை, நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் அளித்துள்ளன.

(i) எஸ்.ஐ.ஆர். மூலம் மேற்கு வங்கம், தமிழகம் உள்ளிட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுவிட்டதாகவும், இதற்கு பாஜகவும், தேர்தல் ஆணையமுமே காரணம் என்றும் காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்க தீர்மானம் கொண்டுவரவும் எதிர்க் கட்சிகள் முடிவு செய்தன.

(ii) நாடாளுமன்ற இரு அவைகளிலும் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவிநீக்க தீர்மானம் கொண்டு வர நோட்டீஸ் அளிக்க வேண்டும். நாடாளுமன்ற விதிப்படி, அதுபோல நோட்டீஸ் அளிக்க

குறைந்தபட்சம் மக்களவை எம்.பி.க்கள் 100 பேரும் மாநிலங்களவை எம்.பி.க்கள் 50 பேரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அதன்படி, மக்களவையைச் சேர்ந்த 130 எம்.பி.க்கள், மாநிலங்களவையைச் சேர்ந்த 63 எம்.பி.க்களின் கையொப்பத்தை எதிர்க்கட்சிகள் பெற்றன. 'இண்டி' கூட்டணியில் உள்ள கட்சிகள், ஆம் ஆத்மி கட்சி எம். பி.க்கள், சில சுயேச்சை எம்.பி.க் கள் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

(iii) இதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற இரு அவைகளிலும் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்க தீர்மானம் கொண்டு வர நோட்டீஸ்களை எதிர்க்கட்சிகள் அளித்தன. அந்த நோட்டீஸ்களில், ஞானேஷ் குமார் மீது எதிர்க்கட்சிகள் 7 குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளன. கட்சிகளிடையே பாரபட்சமாக நடந்து கொண்டது, தேர்தல் மோசடி குறித்த விசாரணைக்கு வேண்டுமென்றே ஆட்சேபம் தெரிவித்தது, பாஜகவுக்கு சாதகமாக பலமுறை செயல்பட்டது உள்ளிட்டவை அந்த குற்றச்சாட்டுகளில் முக்கியமானவை ஆகும்.

(iv) நோட்டீஸ்களை இரு அவைகளும் ஏற்றுக் கொண்டால், இதையடுத்து தீர்மானம் கொண்டுவரப்பட்டு விவாதம் நடத்தப்படும். அந்த விவாதத்தின்போது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கவும், அவர் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கவும் வாய்ப்பு தரப்படும். பின்னர் பெரும்பான்மை பலம் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், ஞானேஷ் குமார் தனது பதவியை இழப்பார். அவருக்கு ஓய்வூதிய பலன் உள்ளிட்ட எந்தப் பலனும் கிடைக்காது. அதேநேரத்தில் விவாதத்தின்போது தாமாக ராஜிநாமா செய்வதாக ஞானேஷ் குமார் தெரிவித்தால், அது ஏற்கப்பட்டு பணியிலிருந்து விடுவிக்கப்படுவார். அப்போது அவருக்கு ஓய்வூதிய பலன் உள்ளிட்டவை கிடைக்கும்.

(v) இந்திய அரசியல் வரலாற்றில், தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்க இதுவரை நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டதில்லை. தற்போதே முதல் முறையாக அதற்கான முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

3. தில்லியில் நடைபெற்ற உலக பாரா தடகள கிராண்ட் ப்ரீயில், இந்தியா 75 தங்கம், 69 வெள்ளி, 64 வெண்கலம் என 208 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. ரஷியா 35 பதக்கங்களுடனும் (15, 14, 6). போஸ்னியா 3 பதக்கங்க ளுடனும் (1, 2, 0) முறையே 2 மற்றும் 3-ஆம் இடங்களைப் பிடித்தன.

4. அமெரிக்கா உடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை; இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன என்று மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(i) இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, உலக நாடுகள் மீது புதிய சீரான 10 சதவீத வரியை விதித்த டிரம்ப், இது 15 சதவீதமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும் வெளியிட்டார்.

(ii) இதனிடையே, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட தனது வர்த்தக கூட்டுறவு நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா புதிய விசாரணையை தொடங்கியுள்ளது. இந்த நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், அமெரிக்க உற்பத்தியை எந்த அளவுக்கு பாதித்துள்ளன என்பதைக் கண்டறியும் நோக்கில் அமெரிக்க வர்த்தகச் சட்டப் பிரிவு 301-இன் கீழ் இந்தப் புதிய விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

(iii) இந்தச் சூழலில், அமெரிக்கா உடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை இந்தியா நிறுத்தி வைத்துள்ளதாக வெளியான ஊடகத் தகவல்களுக்கு மத்திய வர்த்தகம் அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

(iv) அமெரிக்காவுடன் வங்கதேசம், மலேசியா, கம்போடியா போன்ற சிலநாடுகள் வர்த்தக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. வேறு சில நாடுகள் ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளன; அதேநேரம், சட்டபூர்வ ஆவணங்களில் இன்னும் கையொப்பமிடவில்லை.

(v) இந்தியாவைப் பொருத்தவரை, முதல்கட்ட வர்த்தக ஒப்பந்தத்துக்கான வரையறைகள் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

(vi) நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்- ஜனவரி காலகட்டத்தில் அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 72.46 பில்லியன் டாலர்களாக அதிகரித்தது. இது 5.85 சதவீத உயர்வாகும். இறக்குமதி 43.92 பில்லியன் டாலர்களாக (13.87%) அதிகரித்தது.

5. தற்போதைய மேற்காசிய போரின் தாக்கம் போன்ற எதிர்பாராத நெருக்கடியைச் சமாளிக்க ரூ.1 லட்சம் கோடி ஒதுக்கீட்டுடன் பொருளாதார ஸ்திரமாக்கல் நிதியம் அமைக்கும் மத்திய அரசின் முன்மொழிவுக்கு மக்களவை ஒப்புதல் வழங்கியது. நடப்பு நிதியாண்டின் இரண்டாம் கட்ட துணை மானியக் கோரிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த நிதியம் முன்மொழியப்பட்டது.

6. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவைகளும் கூடங்குளம் அணுமின் நிலையமும் (KKNPP):-

(i) பின்னணியும் தேவை வளர்ச்சியும்

- இந்தியாவில் உள்ள மொத்தத் தொழிற்சாலைகளில் 15.66% தற்போது தமிழ்நாட்டில் அமைந்துள்ளன; இது தொழில்துறை, வீட்டு உபயோகம், விவசாயம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் அதிகப்படியான மின்சாரத் தேவையை உருவாக்கியுள்ளது.
- மாநிலத்தின் உச்சபட்ச மின்சாரத் தேவை இந்த ஆண்டில் 22,150 மெகாவாட்டை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது; இது கடந்த ஆண்டின் உச்சபட்சத் தேவையாக இருந்த 20,830 மெகாவாட்டை விட 1,320 மெகாவாட் அதிகமாகும்.
- இந்த ஆண்டில் மின்சாரத் தேவை சுமார் 6% அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) தற்போதைய அணுமின் விநியோகம் (அலகுகள் 1 & 2)

- கூடங்குளம் அணுமின் நிலையத்தின் (KKNPP) 1 மற்றும் 2 ஆகிய அலகுகள் 2014-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளன.
- இந்த இரண்டு அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மொத்த 2,000 மெகாவாட் மின்சாரத்தில், தமிழ்நாட்டிற்கு நாள்தோறும் 1,152 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- TANGEDCO (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) தற்போது இந்த மின்சாரத்தை ஒரு யூனிட்டிற்குச் சராசரியாக ₹5.40 என்ற விலையில் கொள்முதல் செய்து வருகிறது.

(iii) புதிய விரிவாக்கமும் விலை நிர்ணய முரண்பாடும் (அலகுகள் 3 & 4)

- தலா 1,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 3 மற்றும் 4 ஆகிய அலகுகளின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன; இவை முறையே இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் வரிசையாக மின் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த புதிய அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான விலையை, ஒரு யூனிட்டிற்கு ₹5.91 என அணுசக்தித் துறை (DAE) நிர்ணயித்துள்ளது.
- அணுமின்சாரத்தின் முந்தைய விலையான ஒரு யூனிட்டிற்கு ₹3 முதல் ₹3.80 வரையிலான தொகையுடன் ஒப்பிடுகையில், தற்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த விலை கணிசமாக அதிகமாகும்; இது மின்சாரத்தின் கொள்முதல் விலையை ஏறக்குறைய இருமடங்காக உயர்த்துகிறது.
- TANGEDCO தற்போது புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (மின்கலங்களில் சேமிக்கப்படுவது) ஒரு யூனிட்டிற்குச் சுமார் ₹4 என்ற விலையில் கொள்முதல் செய்து வருகிறது; இந்நிலையில், ஏற்கனவே கடும் கடன் சுமையில் தத்தளிக்கும் மின்வாரியத்திற்கு, அணுமின்சாரத்திற்கான இந்த புதிய விலை நிர்ணயம் கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது.

(iv) மாநில மற்றும் மத்திய அரசு இடையிலான பேச்சுவார்த்தைகள்

- கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 மற்றும் 4 ஆகிய அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில், தமிழ்நாட்டிற்குரிய முழுமையான 50% பங்கை, குறைந்த விலையில் ஒதுக்கீடு செய்யுமாறு TANGEDCO நிறுவனம் மத்திய மின் அமைச்சகத்திடம் அதிகாரப்பூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.
- நிர்ணயிக்கப்பட்ட விலையை ஏற்கத் தமிழ்நாடு முன்வராவிட்டால், இந்த அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சாரத்தை அண்டை மாநிலமான கர்நாடகம் கொள்முதல் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக அணுசக்தித் துறை (DAE) தமிழ்நாட்டிற்குத் தெரிவித்துள்ளது.
- குஜராத்தில் உள்ள கக்ரபார் அணுமின் நிலையத்திற்கு, மத்திய அரசு ஆரம்பத்தில் ஒரு யூனிட்டிற்கு ₹5.60 என விலை நிர்ணயித்திருந்தது; ஆனால், குஜராத் மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, அந்த விலையை ஒரு யூனிட்டிற்கு ₹4.50 ஆகக் குறைத்தது.
- குஜராத்திற்கு வழங்கப்பட்டது போன்றே, தங்களுக்கும் மின் விலைக் குறைப்பு செய்யப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையின் நியாயத்தன்மையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தி, மத்திய மின் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தென் மண்டல மின் குழுமத்திற்குத் தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளது.

(v) எதிர்காலக் கண்ணோட்டம் (அலகுகள் 5 & 6)

- கூடங்குளம் அணுமின் நிலையத்தின் (KKNPP) 5 மற்றும் 6-வது அலகுகளுக்கான (தலா 1,000 மெகாவாட் திறன் கொண்டவை) கட்டுமானப் பணிகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.
- இந்த அலகுகளிலிருந்தும் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 50 சதவீதப் பங்கைப்பெறத் தமிழக அரசுக்கு உரிமை உள்ளது. தற்போதே இதற்கான விலையை இறுதி செய்வதன் மூலம், தேவையான மின்பகிர்மானக் கட்டமைப்புகளைச் செம்மையாகத் திட்டமிட TANGEDCO-வால் இயலும்.
- ஒரு யூனிட்டிற்கு ₹5.91 என்பது சற்று அதிகமான விலையாகத் தோன்றினாலும், மின்சாரத்திற்கான தேவை உச்சத்தில் இருக்கும் காலங்களில் தனியார் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கும்போது TANGEDCO செலுத்த வேண்டியிருக்கும் ஒரு யூனிட்டிற்கு ₹12 முதல் ₹17 வரையிலான விலையை ஒப்பிடுகையில், இது மிகவும் குறைவான விலையே ஆகும்.

7. மன பலமே வெற்றிக்கு வழி! :-

(i) நவீன சூழலும் உலகளாவிய நெருக்கடியும்

தொழில்நுட்ப அழுத்தம்:

- நவீன இளைஞர்கள் இணையம் மூலம் தகவல் மற்றும் தொழில் வழிகாட்டுதலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அணுக முடிந்தாலும், அவர்கள் மன அழுத்தத்தை கணிசமாக அதிகரித்துள்ள வேகமான உலகில் வாழ்கிறார்கள்.
- உலகளவில் 10% முதல் 20% வரையிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மனநலப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது; இருப்பினும், இவர்களில் பெரும்பாலோர் உதவி தேடுவதில்லை அல்லது பயனுள்ள தீர்வுகளைக் கண்டடைவதில்லை.
- உலகெங்கிலும் 100 கோடிக்கும் அதிகமான மக்கள் ஏதேனும் ஒரு மனநலப் பாதிப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.
- 2011 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், 20 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே மனநலப் பிரச்சினைகள் 1.8% அதிகரித்துள்ளன.

(ii) சமூகக் காரணிகளும் வளர்ச்சிப் பருவ மைல்கற்களும்

- பாரம்பரியக் கூட்டுக் குடும்ப முறை உடைந்து, சிறிய தனிக்குடித்தனங்களாக (3 முதல் 4 உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்களாக) மாறியிருப்பது, இளைஞர்களுக்குக் கிடைக்க

வேண்டிய மிக முக்கியமான உணர்வுபூர்வமான ஆதரவு அமைப்புகளை இல்லாமல் செய்துவிட்டது.

- மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களில் 50% பேருக்கு, அப்பிரச்சினைகள் 14 வயதிலேயே தொடங்குகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- ஆரம்ப நிலையிலேயே கவனிக்கப்படாமல் விடப்படும் இத்தகைய பிரச்சினைகள், பெரும்பாலும் 15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் தற்கொலை எண்ணங்களாக உருவெடுக்கின்றன.

(iii) இந்தியச் சூழலில் நிலவும் நெருக்கடி

- 13 முதல் 17 வயதுக்குட்பட்ட சுமார் 9 லட்சம் இந்திய இளைஞர்கள் மனநல ரீதியான பதற்றங்களாலும் கவலைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- தேர்வு குறித்த அச்சம், கல்வியில் ஏற்படும் பின்னடைவுகள் அல்லது குறைவான மதிப்பெண்கள், காதல் தோல்விகள் ஆகியவை மன உளைச்சலுக்கான பொதுவான காரணங்களாக அமைகின்றன.
- 2023-ஆம் ஆண்டில், இந்தியாவில் மொத்தம் 1.7 லட்சம் தற்கொலைகள் பதிவாகியுள்ளன; இதில் 13,892 பேர் (8.1%) மாணவர்கள் ஆவர்.
- கடந்த பத்து ஆண்டுகளில் (2013-ஆம் ஆண்டின் தரவுகளுடன் ஒப்பிடுகையில்), மாணவர்களின் தற்கொலை விகிதம் 65% அதிகரித்துள்ளது; NIT மற்றும் IIT போன்ற இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில்கூட இத்தகைய துயரச் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

(iv) மன உறுதியின் வரையறையும் தற்போதைய மனநிலைகளும்

- சிந்தித்தல், உணர்தல் மற்றும் செயல்படுதல் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த ஆற்றலே 'மன உறுதி' (Mental Strength) என வரையறுக்கப்படுகிறது; வாழ்க்கையில் ஏற்படும் சிக்கலான நிகழ்வுகளையும் சவால்களையும் எதிர்கொள்வதற்குத் தேவையான சக்தியை இந்த மன உறுதியே வழங்குகிறது.
- "உடனடித் தீர்வு" மனப்பான்மை: இன்றைய மாணவர்கள் பெரும்பாலும், வெற்றியும் அதற்கான தீர்வுகளும் உடனடியாகவும் மிக எளிதாகவும் கிடைத்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். அவர்கள் ஏதேனும் தடைகளையோ அல்லது எதிர்மறையான விளைவுகளையோ எதிர்கொள்ளும்போது, பெரும்பாலும் மனதளவில் நிலைகுலைந்து (mental breakdown) போகின்றனர்.
- கவலைகளும் பல்வேறு சிந்தனைகளும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானவையே; ஆனால், அவற்றின் மீதே அளவுக்கு அதிகமாகக் கவனம் செலுத்துவது நமக்குத் தீங்கையே விளைவிக்கும். பெரும்பாலும், மாதங்கள் அல்லது வருடங்களுக்குப் பிறகு திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கவலைகள் தேவையற்றவை மற்றும் அர்த்தமற்றவை என்பது தெளிவாகிறது.

(v) முன்மொழியப்பட்ட தீர்வுகள் மற்றும் நிறுவன மாற்றங்கள்

- மனநலம் தொடர்பான பாடங்கள் பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களின் கட்டாயப் பகுதியாக மாற்றப்பட வேண்டும்.
- கல்வி நிறுவனங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வழக்கமான கருத்தரங்குகளை நடத்த வேண்டும், அதைத் தொடர்ந்து மாணவர் நல்வாழ்வை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகள் பள்ளி மட்டத்தில் மட்டும் நின்றுவிடக்கூடாது, ஆனால் கல்லூரிகளிலும், குறிப்பாக தேர்வுக் காலங்களில், வயதுவந்தோருக்கான மாற்றத்தின் போது உணர்ச்சி இடைவெளிகளைக் குறைக்க அவசியம்